தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களை கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தினுடைய கருத்திலே எனக்கு உடன்பாடு இருந்தாலும்கூட, தணிக்கை என்பது மத்திய பாராளுமன்றத்தினுடைய அதிகார வரம்புக்கு உட்பட்ட காரணத்தினாலே இதில் தமிழக சட்டமன்றத்திற்கு உரிமையிருக்கிறதா என்ற சட்டப்பிரச்சினை காரணமாக இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மைய அரசின் அனுமதியை எதிர்பார்த்துத்தான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

திரு. அ. மலர்மன்னன்: தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவினை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

'' தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களை கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. வரவு-செலவுத் திட்டம் 1987-88 வாக்கெடுப்பு— (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும்
(ஆ) கோரிக்கை எண் 33—வீட்டுவசதி
(இ) கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி
} தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு கொண்டுவரப்பட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சி மானியக் கோரிக்கைகளின் மீது 72 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்திருந்தார்கள். அதைப் போன்று கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற மானியக் கோரிக்கையின்மீது ஏறத்தாழ 69 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர்கள் இந்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். உரையாற்றியபோது அரசு கொண்டு வந்திருக்கிற திட்டங்களைப் பாராட்டிய, வாழ்த்திய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போலவே தங்களுக்குத் தரப்பட்ட விவரங்கள் அடிப்படையிலே விமர்சனங்கள் செய்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், எங்கேனும் குறைபாடு இருப்பின் அவற்றைத் திருத்திக்கொள்ள அந்த விமரிசனங்கள் உதவியாக இருக்கும் என்ற அடிப்படையில் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

முதல் மானியக் கோரிக்கை கைத்தறியும் நெசவுத் தொழிலும் பற்றியதாகும். தமிழகத்தைப் பொறுத்தவரை விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான மக்கள் ஈடுபட்டிருக்கிற ஒரு புராதனமானத் தொழில் கைத்தறித் தொழிலாகும். அதிலும் குறிப்பாக இந்தியா முழுவதிலும் இருக்கிற கைத்தறிகளில் ஏறத்தாழ கால் பங்கு, அதாவது 25 சதவீதம், சுமார் 5.56 இலட்சம் தறிகள் தமிழகத்தில் இருக்கின்றன. தனியாரிடையே சிக்கித் தவிக்கின்ற நெசவாளர் பெருமக்களை கூட்டுறவுத் துறையின் கீழ்